மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
ஸ்ரீரங்கம்
OS.No.666/2019

நாள்.27.09.2024 – DW–1 திரு. ராஜமாணிக்கம் த/பெ. சீனிவாசன் (வயது 71 /2024)

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

1. நான் நடத்தி வரும் கடைதிருப்பராய்த்துறை கிராமம் நத்தம் சர்வே எண். 175/1 A1ல்தான் உள்ளது என்றால் சரிதான் . என்னுடைய எதிர் வழக்குரை சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் மேற்சொன்ன சர்வே எண்ணில்தான் நான் கடை நடத்தி வருகிறேன் என்று கூறியுள்ளேன் . நான் வாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் . 1214/2005 சொத்து விவரத்தில் 175/1 A1ல்தான் நடத்தி வருகீறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் திருப்பாராய்த்துறை கிராமம் நத்தம் சர்வே எண் . 178/1 A1ல் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . நான் நடத்திவரும் கடையின் சர்வே எண். 175/1 A1ல்தான் உள்ளது . சர்வே எண் . 178/1 A1 என்பது 175/1 A1 மாறியுள்ளது. சர்வே எண் . 178/1 A1 , 175/1 A1மாறியுள்ளதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா. 1 லிந்து பி.வா.சா.28 ஆவணங்கள் அனைத்திலும் கதவு எண் .1/181 என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால்டி சரிதான் . இந்த ஆவணங்கள் அனைத்தம நான் நடத்திவரம் கடைக்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கதவு எண் . 1/181ன் ஆவணங்கள் இல்லை அதை தெரிந்த நான் பொய்யான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு .1214/2005 வழக்குரை தாக்கல் செய்வதற்கு விவரம் சொன்னதும் நான்தான் இந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்வதற்கு விவரம் சொன்னதும் நான்தான் என்றால் சரிதான் . 1/181 என்பது வாதி ராதகிருஷ்ணன் என்பவரின் கடை என்றால் சரியல்ல என் கடை.

3. 1/181 கடை வாதி ராதகிருஷ்ணன் கடை என்றாலும் நான் அதை மறைத்து என் கடை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல . சர்வே எண். 175/1 A1 எனக்கு சொந்தமான கடை என்பதற்கு அரசு பட்டா , கிரைய ஆவணம் இருக்கிறதா என்றால் பட்டா இருக்கிறது . நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு 1214/2005 என் வழக்கில் சர்வே எண் .175/1 A1 எனக்கு சொந்தமான சொத்தை காண்பிப்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4. எனது கடைக்கு கிழக்கில் நல்லதம்பி என்பவருக்கு சொந்தமான கடை உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நல்லதம்பி கடைக்கு கிழக்கில் செல்வராஜ் சொந்தமான கடை உள்ளதா என்றால் தெரியாது . செல்வராஜ் நடத்தி வந்த கடைக்க கிழக்கில் ஆசைதம்பி க்கு சொந்தமான டீகடை உள்ளது

என்றால் சரிதான் . ஆசைதம்பி, செல்வராஜ், நல்லதம்பி, இராதகிருஷ்ணன் ஆகியோருக்குதான் இந்த சொத்து சொந்தம் என்று அரசு எதிராக வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிருரை மற்றும் சத்திய பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சர்வே எண் .175/1 A1 ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். நான் சொல்வது போல் மேற்சொன்ன சர்வே எண்கள் வருவாய் துறை ஆவணங்களில் இல்லை என்றால் சரியல்ல.

5. வா.சா்.ஆ.1ல் ஆங்கிலத்தில்செய்யப்பட்ட கையெழுத்தக்கும் நான் வாதி எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள கையெழுத்தை காண்பித்து இரண்டு கையெழுத்து என்னுடைய கையெழுத்தா என்று கேட்டோபது வாதி சான்றாவனத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் அசல் வழக்கில் போட்டுள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது என்று சாட்சியம் அளிக்கிறார் . வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று கையெழுத்து நிபுனருக்கு அனுப்பி கேட்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான் . நான் தமிழில் கையொப்பம் செய்யும் வழக்கம் உண்டு . சாட்சியிடம் வா.சா.ஆ.1ல் தமிழ் உள்ள கையெழுத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள தமிழில் உள்ள கையெழுத்தை காண்பித்து எந்த கையெழுத்துஉங்களுடையதா என்று கேட்டபோது சாட்சி வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றும் வா .சா.ஆ.1ல் கையெழுத்து என்னுடையது அல்ல என்று சாட்சியம் கூறுகிறார்.

6. நான் மாத வாடகையை வாதிக்கு செலுத்தி அதற்கான ரசீதை நான் எழுதிக்கொடுத்து வந்தேன் அந்த ஆவணம்தான் வா .சா.ஆ.1 என்றால் சரியல்ல. நான் வாதிக்கு எதிராக நீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பை பொறுத்துதான் தாவா சொத்தை சொந்தம் கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல . சொத்து யார் பெயரில் உள்ளதோ அவரது பெயருக்குதான் மின்சார இணைப்பு பொதுவாக வழுங்கப்படும் என்றால் சரிதான் . நான் நடத்திவரும் கடைக்கு மின் இணைப்பு இராதகிருஷ்ணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான் . கதவு எண் .181/1 வாதிக்கு சொந்தமான சொத்து என்றால் இல்லை . எனக்கு சொந்தமான சர்வே எண்..175/1 A1 ஆகும். வாதிக்கு சொந்தமான சொத்தின் சர்வே எண் . 178 என்றால் எனக்கு தெரியாது . சர்வே எண் .175/1 A1 நான்கு எல்லைகளில் சொல்லியுள்ள இடம் திருப்பராய்துறை கிராமத்தில் இல்லை என்றால் சரியல்ல.

7. 178 சர்வே எண்ணுக்குதான் நான் சொல்லும் நான்கு எல்லைகள் பொருந்தும் என்றால் சரியல்ல . தாவா வழக்கு சொத்தில் 1995ல் நான் வாதியிடம் வாடகைக்கு வந்தேன் என்றால் சரியல்ல . மாத வாடகை ரூ .50, அட்வான்ஸ் தொகை .ரூ.500/− என்ற அடிப்படையில்தான் வாடகைக்கு வந்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் பெட்டிக்கடை நடத்தினேன்

என்றால் சரிதான். அதன்பின்னிட்டு படிப்படியாக 2005ம் வருடம் வாடகை ரூ.50/—லிருந்து 500 ஆகவும் உயர்த்தி அட்வான்ஸ் ரூ.500 லிருந்து ரூ.4,500/— ஆக உயர்த்தி வாதி என்னிடமிருந்து பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. கடைசியாக நான் செலுத்திய மாத வாடகை ரூ.1000/— என்றால் சரியல்ல. மாத வாடகையை நான் என் கைப்பட எழுதி சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து செய்து அதை வாதிவசம் ஒப்படைத்து வந்தேன் என்றால் சரியல்ல. வாதி அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வந்தார்என்றால் சரிதான். வாதி 2012 பணிஓய்வு பெற்று தாவா சொத்தில் மளிகை கடை வைக்கலாம் என்ற என்னத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் மாத வாடகையை நான் சரியாக கொடுக்காத காரணத்தினால் வாதி என்னை கடையை காலி செய்ய சொல்லி கேட்டார் என்றால் சரியல்ல.

8. நான் வாதி மீது வழக்கு தாக்கல் செய்த 2005 லிருந்து நான் வாடகை கொடுப்பதை நிறுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. 2005 லிருந்து இதுநாள்வரைக்கும் ரூ.1,11,000/—வாடகை பாக்கி இருந்தது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் சர்வே எண்ணும், கதவு எண்ணும் தற்போது நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் சொல்லியுள்ள சர்வே எண்ணும் கதவு எண்ணும் முற்றிலும் ஒன்றுக் ஒன்று முரானனவை என்றால் நீதிமன்றத்தில் தவறாக தகவல்களை சொன்னதால் வாதி என்மீது குற்ற நடவடிக்கை எடுக்க உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு சொந்தமான சொத்தில் நான் வாடடைகக்கு நான் வாடகைக்கு இருந்துக்கொண்டுஅந்த சொத்தை சட்ட த்திற்கு புறம்பான வகையில் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நான் வாடகைதாரர் இல்லை சொத்து எனக்கு சொந்தமான சொத்து என்று பொய் கட்சி செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. கதவு எண். 1/181 என்பது வாதிக்கு சொந்தமான கடை அந்த கடையில் என்னுடைய அனுபவத்தில் உள்ளதை காலி செய்து வாதி வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டி தாக்கல் செய்துள்ள வழக்கு வாதிக்கு ஆதராவக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண். 175/1A 1 சர்வே எண். 178 ;இரண்டுமே ஒரே சர்வே என்றால் சரிதான்.

**9. சர்வே எண். 175/1A 1 நத்தம் பதிவேட்டில் இல்லை என்றால் சரியல்ல வாதிக்கு சொந்தமான சர்வே எண்ணை நான் தவறுதலாக இரண்டும் ஒரே சர்வே எண் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.**

**Sd/-xxxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made is his signature

Sd/-xxxxx
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam